கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

CC.No.139/2023

| | | |
|---|---|---|
| நாள். 18.06.2025 | ம.சா.1 | – வேல்முருகன் |
| | த/பெ | – அன்னபாண்டியன் |

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் வாதியான முத்து பாண்டி என்பவரின் விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியும். இந்த வழக்கின் வாதியான முத்து பாண்டி எனது அப்பாவின் தாய் மாமன் ஆவார் எனது தாத்தா ஆவார். இந்த வழக்கின் வாதியான முத்துபாண்டி வழக்கு சம்மந்தமாக எந்த எந்த இடங்களில் எந்த எந்த புகார் மனு அளித்து விசாரணைக்கு ஆஜரானார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சம்மந்தமாக வள்ளியூர் காவல் நிலையத்தில் ஆஜரானார் என்ற விவரம் தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பாளரிடம் சொத்து சம்மந்தமாக புகார் மற்றும் மோசடி சம்மந்தமான வழக்கு அளிக்கப்பட்டது. எந்த காவல் நிலையத்தில் வைத்து முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது என்றால் திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பதியப்பட்டது. தற்போது முதல் தகவல் அறிக்கை எந்த நிலையில் உள்ளது என்றால் அது நிலுவையில் உள்ளது. சொத்து சம்மந்தமாக எனக்கு அனைத்து விவரம் தெரியும். இந்த சொத்து சம்மந்தமாக வாதியான முத்துபாண்டி எந்த எந்த ஒப்பந்தங்கள் ஏற்படுத்தியுள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். மூன்று ஒப்பந்தங்கள் ஏற்படுத்தியுள்ளார். முதல் ஒப்பந்தம் ஏற்படுத்தி 7 வருடங்கள் இருக்கும் தேதி ஞாபகம் இல்லை. எத்தனை ஒப்பந்தங்கள் தற்போது



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.06.18 14:26:13 +0530

நீடிக்கப்பட்டுள்ளது என்றால் மூன்று ஒப்பந்தங்களும் நீடிக்கப்பட்டுள்ளது. முதல் ஒப்பந்தத்தின் கால அவகாசம் மூன்று மாதங்கள் ஆகும் அதன் தொகை சுமார் 4 கோடி அளவில் இருக்கும். இரண்டாம் ஒப்பந்தத்தின் தொகை சுமார் 6 கோடி அளவில் இருக்கும். மூன்றாம் ஒப்பந்தத்தின் தொகை சுமார் 8 கோடி அளவில் இருக்கும். ஒப்பந்த தொகை முடிந்தபிறகு மீதமுள்ள தொகை சுமார் 4 கோடி ஆகும். இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள R.S.மகாராஜன் என்பவரை எனக்கு நன்றா தெரியும். இந்த வழக்கின் எதிரியை வாதிக்கு அறிமுகப்படுத்தியவர் R.S.மகாராஜன் என்றால் அவர் அறிமுகபடுத்தவில்லை. R.S.மகாராஜனும், எதிரியும் நண்பர்கள் ஆவார். அவர்கள் இருவரும் தொழில் கூட்டாளிகள் ஆவார். அவர்கள் தொழில் கூட்டாளிகள் என்பதற்கு இந்நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. R.S.மகாராஜனுக்கு சொந்த ஊர் நாகர்கோவில் ஆகும். R.S.மகாராஜன் நாகர்கோவிலில் தான் வசித்து வந்தார். இந்த எதிரி திருநெல்வேலி வசித்து வருகிறார் மற்றும் நாகர்கோவில் வீடு உள்ளது. R.S.மகாராஜன் தற்போது உயிரோடு இல்லை. அவர் இறந்து 4 வருடங்கள் இருக்கும். முத்துபாண்டியின் இடத்திற்கான ஒப்பந்தத்திற்கு R.S.மகாராஜனும், எதிரியும் சேர்ந்து வந்துள்ளார்களா அல்லது தனியாக வந்துள்ளார்களா என்றால் சேர்ந்து வந்துள்ளார்கள். முதல் ஒப்பந்தம் சம்மந்தமாக வாதியான முத்துபாண்டிக்கு முதலில் அறிமுகமானவர் R.S.மகாராஜனா அல்லது எதிரியா என்றால் இருவரும் சேர்ந்து வந்துள்ளார்கள். இருவருமே மூன்று மாதங்களுக்கு முன்பே சொத்து சம்மந்தமாக அறிமுகமாகிவிட்டனர். வழக்கில் குறிப்பிட்டுள்ள மனை யாருடைய பெயரில் இருந்தது என்றால் வாதியான முத்துபாண்டி பெயரில் இருந்தது. யாருடைய பெயரில் இருந்தது என்றால் எதிரியின்



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.06.18 14:26:21 +0530

அறிவுறுத்தலின் படி R.S.மகாராஜனும், முத்துபான்டியன் சேர்ந்து R.S.மகாராஜன் நகர் என்ற பெயரில் விளம்பரம் செய்யப்பட்டது. இந்த மனை சம்மந்தமாக வேறு வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் நாங்குநேரி நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. ஏர்வாடி காவல் நிலையத்திலும் புகார் அளிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது அதில் Stay ஆர்டர் உள்ளது. நிலுவையில் உள்ள வழக்குகள் R.S.மகாராஜன் மேல் தொடுக்கப்பட்டது. நிலுவையில் உள்ள இரண்டு வழக்குகளும் R.S.மகாராஜன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். ஒப்பந்தங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் வழக்கில் ஒப்பந்தம் பற்றி எதுவும் கூறவில்லை மற்றும் தாக்கல் செய்யவில்லை. வழக்கின் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 19.07.2019 கிரைய ஆவணமானது யார் பெயருக்கு ஏற்படுத்தப்பட்டது என்றால் R.S.மகாராஜன் பெயருக்கு எழுதிய கிரைய ஒப்பந்தம் ஆகும். இந்த கிரைய ஒப்பந்தத்தின் பாக்கி தொகை சுமார் 4 கோடி ஆகும் என்றால் எதிரி கூறியதன் அடிப்படையில் R.S.மகாராஜன் பெயருக்கு கிரைய ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. சில சொத்துக்கள் எதிரி பெயரிலும் கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.06.18 14:26:30 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்